# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 1659/8 - 2010 ජූනි 22 වැනි අඟහරුවාදා - 2010.06.22

*1659/8 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) – மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

*1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்பட்ட விசாரணை*

மேல் மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச்சட்டத்தின் 2(2)ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி கலாநிதி சந்திரதாச நாணாயக்கார அவர்களின் கீழ் அமைக்கப்பட்ட தனிநபர் விசாரணை ஆணைக்குழுவினால் கீழ்வரும் குற்றச்சாட்டுக்களில் குறிப்பிடப்பட்ட பிழையான செயற்பாடுகளைக் காரணமாகக் கொண்டு கொழும்பு மா நகரசபையினது செயற்பாடுகளின்போது மேற்சொல்லப்பட்ட நியதிச்சட்டத்தின் 2(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட பிழையான செயற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா என்பதுபற்றி பரிசீலிக்கப்பட்டது.

அவ்வாறு பரிசீலனை செய்யப்பட்ட குற்றச்சாட்டுக்களாவன–

(அ) கொழும்பு மா நகர சபையினது செயற்பாடுகளின்போது 2007.04.01 ஆம் திகதியிலிருந்து அல்லது அதற்கு அண்மித்த தினத்திலிருந்து எதிர்வரும் 2 வருட காலத்துக்கு கோட்டை நகர்ப்புறப் பிரிவு மற்றும் 05 ஆம் இலக்கம் கொண்ட மாவட்ட அலுவலக அதிகாரப் பிரிவில் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ ஒப்பந்த இலக்கம் 96/A, துட்டகைமுனு மாவத்தை, கொகுவல, தெகிவளை என்ற முகவரியிலுள்ள 'செயார் கிளின் தனியார் கம்பனிக்கு' பெற்றுக் கொடுப்பதற்குரிய "விலைமனுக்கோரல்" கோரப்படாமல் மற்றும் /அல்லது ஒப்பந்த சபையின் அங்கீகாரமின்றி ஒப்பந்தம் செய்யப்பட்டமை மா நகர சபையின் கட்டளைச் சட்டத்தின் 229(1) (ஆ) மற்றும் /அல்லது 229(1) (ஈ) பிரிவை /பிரிவுகளை மீறுவதாக செயல்பட்டமை மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச்சட்டத்தின் 2(1) (அ) மற்றும் /அல்லது 2(1) (இ) பிரிவில்/ பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம் /குற்றங்களைப் புரிதல்.

(ஆ) கொழும்பு மா நகர சபையினது செயற்பாடுகளின்போது 2007.07.01 ஆம் திகதியிலிருந்து அல்லது அதற்கு அண்மித்த தினத்திலிருந்து எதிர்வரும் 2 வருட காலத்துக்காக மாவட்ட இலக்கம் 01 ஐ கொண்ட மாவட்ட அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ ஒப்பந்த, இலக்கம் 96/A, துட்டகைமுனு மாவத்தை, கொகுவல, தெகிவளை என்ற முகவரியிலுள்ள 'செயார் கிளின் தனியார் கம்பனிக்கு' பெற்றுக் கொடுப்பதற்குரிய 'விலைமனுக்கோரல்' கோரப்படாமல் மற்றும் /அல்லது ஒப்பந்த சபையின் அங்கீகாரமின்றி ஒப்பந்தம் செய்யப்பட்டமை மா நகர சபையின் மாகாண சட்டத்தின் 229(1)(ஆ) மற்றும் /அல்லது 229(1)(ஈ) பிரிவை /பிரிவுகளை மீறுவதாக செயல்பட்டமை மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிசட்டத்தின் 2(1)(அ) மற்றும் /அல்லது 2(1)(இ) பிரிவில்/ பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம் / குற்றங்களைப் புரிதல்.

(இ) கொழும்பு மா நகர சபையினது செயற்பாடுகளின்போது 2007.07.01 ஆம் திகதியிலிருந்து அல்லது அதற்கு அண்மித்த தினத்திலிருந்து எதிர்வரும் 2 வருட காலத்துக்காக கோட்டை மற்றும் புறக்கோட்டை நகர்ப்புறங்களைத் தவிர்ந்த 'மாவட்ட இலக்கம் 02A மாவட்ட அலுவலக அதிகாரப் பிரதேசத்தின் எஞ்சிய பகுதியின்' திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ ஒப்பந்தம் இலக்கம் 141, கிருள வீதி, கொழும்பு 05, என்ற முகவரியிலுள்ள "அபான்ஸ் என்வயர்மன்ட் தனியார் கம்பனிக்கு" பெற்றுக் கொடுப்பதற்குரிய 'விலைமனுக்கோரல்' கோரப்படாமல் மற்றும் /அல்லது ஒப்பந்தம் சபையின் அங்கீகாரமின்றி ஒப்பந்தம் செய்யப்பட்டமை மா நகர சபையின் கட்டளைச் சட்டத்தின் 229(1)(ஆ) மற்றும் /அல்லது 229(1)(ஈ) பிரிவை/ பிரிவுகளை மீறுவதாக செயல்பட்டமை மேல் மாகாண மாகாண சபையின் 1991ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச்சட்டத்தின் 2(1)(அ) மற்றும் /அல்லது 2(1)(இ) பிரிவில்/பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம் /குற்றங்களைப் புரிதல்.

(ஈ) கொழும்பு மா நகர சபையினது செயற்பாடுகளின்போது 2006.11.24 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதி ஒன்றில் 'மாநகர சபை உறுப்பினர்களுக்கிடையில்' பகிர்ந்து கொடுப்பதற்காக ஊசா வர்க்கத்தைச் சேர்ந்த 1590 தையல் இயந்திரங்களை கொள்வனவு செய்து அதற்காக ரூபா 2,05,90,500.00 அல்லது அதற்கு அண்மித்த தொகையினை செலவிடுவதற்கு பிரேரணையினை நிறைவேற்றி 'டெலி சோனிக் இன்டர்நெசனல், நிறுவனத்துடன் 2006, நவெம்பர் மாதம் 29 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினம் ஒன்றில் ஒப்பந்தத்திற்கு உட்பட்டதன் மூலம் மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச்சட்டத்தின் 2 (1)(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றத்தைப் புரிதல்.

(உ) கொழும்பு மா நகர சபையினது செயற்பாடுகளின்போது 2006.12.22 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த கால எல்லைக்குள் எஸ்பெஸ்டஸ் கூரைத்தகடு கொள்வனவு செய்யும்போது நியமக் குறிப்பீடுகளுக்கு ஏற்புடையது என மதிப்பீட்டுக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்ட 'ஸ்ரீ ரம்கோ' தனியார் நிறுவனத்தால் முன்வைக்கப்பட்ட கூரைத்தகடு ஒன்றின் விலை ரூபா 746.23 சதமாகிய எஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகளை கொள்வனவு செய்வதை நிராகரித்து சந்திரஸ்ரீ ஹாட்வெயார் ஸ்டோர்ஸினால் முன்வைக்கப்பட்ட கூரைத்தகடு ஒன்றின் விலை 968.30 ரூபாவிற்கு எஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகளை கொள்வனவு செய்வதற்கு சபை அங்கீகாரம் அளித்து, அதற்கமைய செயல்பட்டமை மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச்சட்டத்தின் 2(1)(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றத்தைப் புரிதல்.

(ஊ) கொழும்பு மா நகர சபையினது செயற்பாடுகளின்போது 2006.12.22 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதி ஒன்றில் 'மாநகர சபை உறுப்பினர்களுக்கிடையில்' பகிர்ந்து கொடுப்பதற்காக 10211 எஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகளை கொள்வனவு செய்வதற்கான பிரேரணையை சபை அங்கீகாரம் பெற்று, கொள்வனவு செய்வதற்கு இடமளித்து அதற்காக மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 188(1) பிரிவுக்கு ஏற்புடையதாகாத வகையில் ரூபா 8,597,662.00ஐ அல்லது அதற்கு கிட்டிய தொகையினை செலுத்தியதன் மூலம் மேல்மாகாண மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச்சட்டத்தின் 2(1)(அ) மற்றும் 2/அல்லது 2(1)(இ) பிரிவு /பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம் /குற்றங்களைப் புரிதல்.

(எ) கொழும்பு மா நகர சபையினது செயற்பாடுகளின்போது 2006.12.22 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதி ஒன்றில் 'மாநகர சபை உறுப்பினர்களுக்கு' வழங்குவதற்காக 5682 கல்வனைஸ் தகடுகளை கொள்வனவு செய்வதற்கான பிரேரணைக்கு சபை அங்கீகாரமளித்து கொள்வனவு செய்வதற்கு இடமளித்து அது குறித்து மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் 188(1) பிரிவுக்கு ஏற்புடையதாகாத வகையில் ரூபா 52,27,440.00ஐ அல்லது அதற்கு கிட்டிய தொகையினை செலுத்தியதன் மூலம் மேல் மாகாண மாகாண சபையின் 1991ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச்சட்டத்தின் 2(1)(அ) மற்றும் /அல்லது 2(1)(இ) பிரிவில் /பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம் /குற்றங்களைப் புரிதல்.

(ஏ) கொழும்பு மா நகர சபையினது செயற்பாடுகளின்போது 2007.05.29 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினத்தில் கேள்விமனுக்கோரல் படிமுறைக்கு புறம்பான முறையில் கொள்வனவு செய்யப்பட்ட சமைத்த உணவுப் பெக்கற்றுக்கள் 102174 அல்லது அதற்கு அண்மித்த எண்ணிக்கையை மா நகர சபை உறுப்பினர்கள் மூலம் கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்து, அதற்காக அறுபத்தி நான்கு இலட்சத்து ஐம்பத்து நாலாயிரத்து எழுநூற்று இருபத்தைந்து ரூபா (64,54,725/-) அல்லது அதற்கு அண்மித்த தொகையொன்றினை மா நகர சபையின் பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கு சபை அங்கீகாரம் அளித்து மேல்மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச்சட்டத்தின் 2(1)(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றத்தைப் புரிதல்.

(ஐ) கொழும்பு மா நகர சபையினது செயற்பாடுகளின்போது 2006.05.01 ஆம் திகதியிலிருந்து 2007.05.01ஆம் திகதிவரையிலான கால எல்லைக்குள் கொழும்பு மா நகர சபைக்குச் சொந்தமான விஹாரமகாதேவி பூங்கா அமைந்துள்ள நிலப்பரப்பில் 'சத்துட்டு உயன' களியாட்டங்களை நடாத்தி அதன்மூலம் உழைக்கப்பட்ட ரூபா 2,89,19,640.81 சதம் அல்லது அதற்கு

*அண்மித்த தொகையினை மாநகர சபை பொது நிதியில் வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காததினால் மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 185(2)(உ) பிரிவை மீறியதன் மூலம் மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச்சட்டத்தின் 2(1)(அ) மற்றும் /அல்லது 2(1)(இ) பிரிவில் /பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம் /குற்றங்களைப் புரிதல்.*

கொழும்பு மா நகர சபைக்கு எதிராக மேலே கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களைப் பரிசீலித்த ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி கலாநிதி சந்திரதாச நாணாயக்கார அவர்களின் கீழ் அமைக்கப்பட்ட தனிநபர் விசாரணை ஆணைக்குழுவின் பரிசீலனை அறிக்கைக்கு அமைய மேலே குறிப்பிடப்பட்ட அ, ஆ, இ, ஈ, ஊ, எ ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு கொழும்பு மா நகர சபை குற்றப் பொறுப்புடையது என்றும் உ, ஏ, ஐ ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு கொழும்பு மா நகர சபை குற்றப்பொறுப்பற்றது என்றும் தீர்மானத்திற்கு வந்தது.

மேலும், மேல் மாகாண முதலமைச்சர் மற்றும் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் மேலே கூறப்பட்ட மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பி.எல்.கே.விமலசந்திர அவர்களின் கீழ் அமைக்கப்பட்ட தனிநபர் விசாரணை ஆணைக்குழுவினால் மேற்படி அ, ஆ, இ, ஈ, ஊ, எ ஆகிய குற்றச்சாட்டுக்கள் மற்றும் கீழே குறிப்பிடப்பட்ட மேலதிக குற்றச்சாட்டு தொடர்பில் கொழும்பு மா நகர சபையின் மா நகர முதல்வர், பிரதி முதல்வர், உறுப்பினர்களின் தனிப்பட்ட மற்றும் கூட்டு பொறுப்புடமை என்பன பரிசீலணை செய்யப்பட்டன. மேலே குறிப்பிடப்பட்ட மேலதிக குற்றசாட்டாவது.

*‘2006.05.01 ஆந் திகதியிலிருந்து 2007.05.01 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் கொழும்பு மா நகர சபைக்குச் சொந்தமான விஹாரமகாதேவி பூங்கா அமைந்துள்ள நிலப்பரப்பில் சத்துட்டு உயன களியாட்டங்களை நடாத்துவதன் மூலம் உழைக்கப்பட்ட ரூபா 15,555,440.81 (ஒரு கோடி ஐம்பத்து ஐந்து இலட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரத்து நானூற்றி நாற்பது ரூபா எண்பத்து ஒன்று சதம்) அல்லது அதற்கு அண்மித்த தொகையை மாநகர சபை பொது நிதியத்திற்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் 185(2)(உ) பிரிவு மீறப்பட்டதன்மூலம் மேல்மாகாண மாகாண சபையின் 1991ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பாக நியதிச்சட்டத்தின் 2(1)(அ) மற்றும் /அல்லது 2(1) (இ) பிரிவில் /பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம் /குற்றங்களைப் புரிதல்.*

உரிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் தனிநபர் விசாரணை ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக ஆழமாக ஆராயப்பட்ட பின்னர் நான் அது தொடர்பில் சுயாதீன தீர்மானங்களுக்கு வந்துள்ளேன். அதன்படி கொழும்பு மாநகர சபை மேலே குறிப்பிடப்பட்ட அ, ஆ, இ, ஈ, ஊ, எ மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட மேலதிக குற்றச்சாட்டுக்களுக்கும் குற்றவாளியென நான் தீர்மானிக்கின்றேன்.

அதற்கமைய கொழும்பு மாநகர சபை செயற்படும்போது மேலே குறிப்பிடப்பட்ட அ, ஆ, இ, ஈ, ஊ, எ ஆகிய குற்றச்சாட்டுக்களிலும் மேற்குறிப்பிடப்பட்ட மேலதிக குற்றச்சாட்டிலும் குறிப்பிடப்பட்ட பிழையான செயற்பாடுகளை காரணமாகக் கொண்டு மேல் மாகாண மாகாண சபையின் 1991ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச்சட்டத்தின் 2(1)(அ) மற்றும் 2(1)(இ) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிழையான செயற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதில் நான் திருப்தியடைகின்றேன்.

அவ்வாறு திருப்தியடைந்ததன் பிற்பாடு மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச்சட்டத்தின் 2(1)(iii) ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் 2010ஆம் ஆண்டு யூன் மாதம் 23ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் கொழும்பு மாநகரசபையை இத்தால் கலைக்கின்றேன்.

பிரசன்ன ரணதுங்க
முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும்,
காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிருவாகம், மின்சக்தி மற்றும் வலு, மனிதவள,
வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு பற்றிய அமைச்சர்,
மேல்மாகாணத்தின் மாகாண சபை.

மேல் மாகாணத்தின பிரதான அமைச்சு,
சிராவஸ்தி கட்டடம்,
கொழும்பு 07,
2010, யூன் 21.

7- 220

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.